ශ්‍රී ලංකා නීති ආධාර කොමිෂන් සභාව
இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு
**Legal Aid Commission of Sri Lanka**

# சட்ட உதவி ஆணைக்குழு

## நீதிக்காக பணிபுரியும் போது சமாதானம் ஏற்படும்



USAID நிறுவனத்தின் CORE Justice நிகழ்ச்சித்திட்டத்தின் உதவியினால் உருவாக்கப்பட்டது

USAID
FROM THE AMERICAN PEOPLE

USAID
FROM THE AMERICAN PEOPLE

## பொறுப்புத் துறப்பு

"இவ்வெளியீடு சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் அமைப்பின் (USAID) ஊடாக அமெரிக்க மக்கள் வழங்கிய ஆதரவின் மூலம் சாத்தியமான விடயமாக அமைந்துள்ளது. இவ்வறிக்கையின் உள்ளடக்கங்கள் USAID அமைப்பின் அல்லது ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் நோக்குகளை பிரதிபலிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை".

Ministry of Justice

# சட்ட உதவி ஆணைக்குழு

நீதிக்காக பணிபுரியும் போது சமாதானம் ஏற்படும்

**வழிகாட்டிக் கைநூல்**

**இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு**

*copyrights@ Legal Aid Commission of Sri Lanka*



## தவிசாளரின் செய்தி

சட்ட உதவி ஆணைக்குழு 1978 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட அமைப்பாகும். நியதிச் சட்ட அமைப்பான சட்ட உதவி ஆணைக்குழு தகுதிவாய்ந்த சட்டத்தரணிகளின் அணி ஒன்றின் ஊடாக சலுகைகளற்ற சமுதாயத்துக்கு இலவச சட்ட ஆலோசனைகளை வழங்குகின்றது. எமது ஆணைக்குழுவினால் மனித உரிமைகள், சிறுவர்களின் உரிமைகள், பெண்களின் உரிமைகள், முதியோர் உரிமைகள், குடும்பச் சட்டம், தொழிலாளர் சட்டம் உள்ளடங்கலாக பல விடயங்களில் சட்ட உதவிகள் வழங்கப்படுகின்றது. எம்மால் முடிந்தளவு அதிகமான குடியியல் சட்ட விவகாரங்களில் நிவாரணம் எமது உதவிப் பரப்பினை அதிகரிக்கும் நோக்கில் நாம் விழிப்புணர்வூட்டல் மற்றும் வழிகாட்டல் நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றோம்.

உரிமை மீறல்கள் தொடர்பில் அதிக எண்ணிக்கையான நிறுவனங்கள் ஈடுபாடுகளைக் கொண்டுள்ள போதும் இலங்கை அரசாங்கத்தின் நியதிச் சட்ட அமைப்பொன்றாக சட்ட உதவி ஆணைக்குழு மாத்திரமே சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அதிகாரம் மிக்க சட்ட வலு மிக்க அமைப்பாகத் திகழ்கின்றது.

சட்ட உதவி ஆணைக்குழு மக்களின் வருமானம், சமூக நிலை, இனம், தேசியம், மதம், பால்நிலை அல்லது வயது போன்ற விடயங்களைக் கருத்திற்கொள்ளாமல் மக்களுக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குகின்றது. நாடளாவிய ரீதியில் சட்ட உதவிக்கு உரித்தான புறக்கணிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான தனி நபர்கள் நீதிக்கான சமமான அணுகலைப் பெற்றுக்கொள்ள உதவியமை தொடர்பில் நாம் பெருமை கொண்டவர்களாக உள்ளோம்.

சமூகங்கள், அதிகாரிகள் மற்றும் தனிநபர்கள் போன்றோர் சட்டத்தைப் புரிந்து கொள்ளவும், தமது உரிமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் அறிந்தவர்களாக இருப்பதற்கும் அத்துடன் சட்ட உதவி ஆணைக்குழுவின் கடப்பாடு கொண்ட சட்டத்தரணிகளின் ஊடாக அவர்கள் உதவிகளைப் பெற முடியும் என்பதை அறிவதற்கும் இக் கைநூல்களின் வரிசை உதவுவதோடு அவை சமூகங்களை மேலும் வலுப்படுத்தும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

**றொஹான் சஹபந்து**

- ஜனாதிபதி சட்டத்தரணி

தவிசாளர், சட்ட உதவி ஆணைக்குழு

## இலங்கை
## சட்ட உதவி ஆணைக்குழு

1978 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் சட்ட உதவி ஆணைக்குழு (LAC) உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பு சமூக நிலை, தமது பால்நிலையின் தன்மை, சாதி, வயது அல்லது ஏனைய வரன்முறை காரணமாக நீதிக்கான அணுகல் தடைப்பட்டதாக அல்லது மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படும் பாதிப்புறும் ஏதுநிலை மிக்க மற்றும் தேவைகள் கொண்ட சமூகங்கள் அத்துடன் தனி நபர்களுக்கு சட்ட உதவி வழங்குவதற்காக உருவாக்கப்பட்டதாகும்.

சட்ட உதவி ஆணைக்குழுவானது அதன் ஸ்திரத்தன்மை மற்றும் பேண்தகு நிலை காரணமாக ஏனைய சட்ட உதவி வழங்கும் நிறுவனங்கள் மத்தியில் முதன்மையான நிறுவனமாகக் கருதப்படுகின்றது.

இலங்கையின் 9 மாகாணங்களிலும் தனது 84 நிலையங்கள் ஊடாக நிலைத்து நிற்கும் சட்ட உதவி ஆணைக்குழு அனைவருக்கும் எவ்வித முற்கற்பிதங்களும் இன்றி கல்வி வழங்குதல், விழிப்புணர்வு உருவாக்கம் மற்றும் சட்ட உதவி வழங்குதல் போன்ற சேவைகளை வழங்கி வருகின்றது. இவ்வாணைக்குழுவில் 120 நிரந்தர சட்ட உத்தியோகத்தர்கள் உள்ளதுடன் பிராந்திய நீதிமன்றங்களில் இருந்து பணிபுரியும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சட்டத்தரணிகளின் உதவியுடன் ஆணைக்குழு இயங்கி வருகின்றது.

உரித்துடைய அனைத்து இலங்கையர்களும் நீதிக்கான சம அணுகலைப் பெறக் கூடிய சமூகம் ஒன்றை உருவாக்குவதே ஆணைக்குழுவின் தொலை நோக்காக அமைந்துள்ளது.

இந்நோக்கத்தை எட்டும் இலட்சியத்துடன் சட்ட உதவி ஆணைக்குழு பல கருத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. ஆணைக்குழுவின் சட்டம் நாட்டிலுள்ள "உரித்துடைய நபர்கள்" அனைவருக்கும் சட்ட உதவி ஆணைக்குழு சட்ட உதவி வழங்க வேண்டும் என்று பணித்துள்ளது.

## எமது தொலைநோக்கு

**நீதிக்கான சம அணுகல்**

அனைத்து உரித்துடைய இலங்கையர்களும் அவர்களின் பொருளாதார அல்லது சமூக நிலை, பால்நிலை, சாதி, சமய நம்பிக்கை, அல்லது தேசியம் அல்லது மாற்றுத்திறன் போன்ற விடயங்கள் கருத்திற் கொள்ளப்படாமல் நீதிக்கான சம அணுகலைப் பெறும் சமூகம் ஒன்றை உருவாக்குதல்.

"சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள்" என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையாகும். எவ்வாறாயினும், சட்டத்தரணி ஒருவரின் உதவியைப் பெற வசதி இல்லாத ஒருவர் நீதிமன்றம் ஒன்றில் எந்தவொரு மனக்குறைக்காகவும் சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளும் வேளை அவர் நீதியை சமமாக அணுகுவது கேள்விக்குரியதாகும்.

1978 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சட்ட உதவி ஆணைக்குழு புறக்கணிக்கப்பட்ட சமூகங்கள் மற்றும் தனிநபர்களுக்கு நீதிக்கான சம அணுகலை வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்டதாகும். தற்காலத்தில் ஆணைக்குழு அதன் சேவைகளை நாடளாவிய ரீதியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 84 நிலையங்களின் ஊடாக வழங்குகின்றது.



## சட்ட உதவிக்கு உரித்துடையோர் யார்?

### இலவச சட்ட ஆலோசனை

எந்தவொரு நிதியியல் வரன்முறைகளுமின்றி எந்தவொரு நபரும் எந்த ஒரு சட்டப் பிரச்சினைக்கும் இலவச சட்ட அறிவுரைக்கு உரித்துடையவர்களாகும்.

### இலவச சட்ட பிரதிநிதித்துவம்

பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு சட்ட நீதிமன்றமொன்றில் சட்டப் பிரதிநிதித்துவம் இலவசமாக வழங்கப்படும்.

ரூபாய் 25,000/= இலும் குறைந்த மாதாந்த வருமானம் பெறும் நபர்கள் இலவச சட்டப் பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாகும். (இந்த வருமான வரன்முறை காலத்துக்கு காலம் மாற்றமடையலாம்).

விதிவிலக்கான சூழ்நிலைகளில் (விண்ணப்பதாரி அல்லது அவரின் குடும்ப உறுப்பினர் தீவிர நோயினால் பாதிக்கப்பட்டிருத்தல்/ இயலாமை/ ஏனைய விசேட காரணங்கள்) பணிப்பாளர் நாயகத்தின் தற்துணிவின் பிரகாரம் மாதாந்தம் 25,000/= இலும் அதிக வருமானம் கொண்ட நபருக்கு இலவச சட்டப் பிரதிநிதித்துவம் வழங்கப்படலாம்.

## வருமான வரன்முறை எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது?

சட்ட உதவிக்காக விண்ணப்பிக்கும் நபரின் வருமானத்தை அவர் வசிக்கும் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டும். கிராம உத்தியோகத்தரிடம் இருந்து பெறப்படும் இந்த உறுதிப்படுத்தல் போதுமானதாக இருந்த போதும், சில சூழ்நிலைகளில் பிரதேசச் செயலாளரிடம் இருந்து ஒரு சான்றிதழ் தேவைப்படுத்தப்படும்.

## சட்ட உதவி வழங்கப்படும் வேளை பெண்கள் மற்றும் சிறுவர்கள் விசேட கவனிப்புக்கு உரித்துடையவர்களா?

ஆம், பெண்கள் மற்றும் சிறுவர்கள் தாபரிப்பு வழக்குகளின் போது அவர்களின் வருமானம் கருத்திற் கொள்ளப்படாமல் அவர்களுக்க இலவச சட்ட உதவி மற்றும் சட்டப் பிரதிநிதித்துவம் என்பன வழங்கப்படும். வீட்டு வன்முறைகளால் பாதிக்கப்படும் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு அவர்களின் வருமானம் கருத்திற் கொள்ளப்படாமல் இலவச சட்ட உதவி பெற உரித்துடையவர்கள்.

## சட்ட உதவி பெறுவதற்கு தகுதி வாய்ந்த வழக்கு வகைகள் எவை?

### குடியியல் வழக்கு நடவடிக்கைகள்

#### தாபரிப்பு வழக்குகள்

கணவன் மனைவி அல்லது தங்கி வாழும் பிள்ளை ஒன்றை பராமரிக்கத் தவறுதல் சம்பந்தமான வழக்குகளில் அநேகமாக சட்ட உதவி ஆணைக்குழுவின் உதவி வழங்கப்படுகின்றது. அவ்வாறான சூழ்நிலைகளில் வருமானம் பற்றிய வரன்முறை கருத்திற் கொள்ளப்படுவதில்லை.

#### விபத்து வழக்குகளில் நட்டஈடுகள் கோரல்

விபத்து இடம்பெற்று இரண்டு வருட காலங்களுக்குள் விபத்தினால் பாதிக்கப்பட்ட நபர்/ தங்கி வாழ்பவர் விபத்து இடம்பெற்ற பிரதேசத்தின் நியாயாதிக்கத்தின் கீழ் வரும் மாவட்ட நீதிமன்றத்தில் நட்டஈடு கோரி முன்னெடுக்கப்படும் வழக்குகளுக்கு சட்ட உதவி ஆணைக்குழு உதவிகளை வழங்கும்.

#### மணநீக்க/ பாதுகாவலர் வழக்குகள்

திருமணத்தில தவறு இழைத்த கணவர்களுக்கு எதிராக மற்றும் அதன் காரணமாக மாவட்ட நீதிமன்றம் ஒன்றில் மணநீக்கம் கோரும் பெண்களுக்கு, திருமணத்தில் தவறு இழைத்தோர் எனக குற்றஞ்சாட்டப்பட்டு அதனை எதிர்த்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் பெண்களுக்கு மற்றும் மணநீக்கம் வழக்கில் பிள்ளையின் பாதுகாவல் உரிமையைப் பெற்றுக்கொள்ள முனையும் பெண்களுக்கு சட்ட உதவி ஆணைக்குழு இலவச சட்டப் பிரதிநிதித்துவத்தை வழங்கும்.

#### காணி/ கட்டாய வெளியேற்றம்

புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு உரித்தான காணிகளில் வலுக்கட்டாயமாக குடியிருக்கும் நபர்களை வெளியேற்றும் வழக்குகளில் அம்மக்களின் சார்பாக இலவச சட்ட உதவிகள் வழங்கப்படும்.

#### காசு மற்றும் ஏனைய குடியியல் வழக்குகள்

குறிப்பிட்ட நிதியியல் கொடுக்கல் வாங்கல்களில் அல்லது வங்கிக் கடன் தொடர்பான விடயங்களில் அநீதி இடம்பெற்றிருந்தால் அல்லது வாடகைக் கொள்வனவு ஒன்றில் எதிராளி ஒருவருக்கு அநீதி இடம்பெற்றிருக்கும் பட்சத்தில் பணிப்பாளர் நாயகம் அவரது தற்துணிவில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளில் அவ்வாறான நபர்களுக்கு மாவட்ட நீதிமன்றங்களில் இலவச சட்ட ஆலோசனை மற்றும் சட்டப் பிரதிநிதித்துவம் என்பவற்றை வழங்குவதற்கு அனுமதியளிக்கும் அதிகாரம் உள்ளவராகக் காணப்படுகின்றார்.

## ஏனைய நீதவான் நீதிமன்ற வழக்குகள்

பின்வரும் சந்தர்ப்பங்களில் நீதவான நீதிமன்றம் ஒன்றில் இலவச சட்டப் பிரதிநிதித்துவம் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| ஆரம்ப நீதிமன்றச் செயற்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 66 இன் கீழ்க் காணப்படும் ஏற்பாடுகளுக்கு ஏற்ப சொத்துரிமை தொடர்பில் வழக்காடும் சட்ட உதவி பெறத் தகுதியான வழக்காளிகளுக்கு. | 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க முதியோர் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க முதியோர் பராமரிப்புச் சபையினால் தாபரிப்பிற்கான கட்டளையைக் கோரி விண்ணப்பங்களை மேற்கொள்வோருக்கு. | பொருத்தமான சூழ்நிலைகளில் குற்றம் ஒன்றினால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான வழக்குகளில் தோன்றுவதற்காக. |

## அடிப்படை உரிமைகள் விண்ணப்பங்கள்

சட்ட உதவி ஆணைக்குழு உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை விண்ணப்பங்களை தாக்கல் செய்வதற்கு சட்ட உதவி ஆணைக்குழு உதவும்.



பிரதம நீதியரசர் அடிப்படை மனித உரிமை மீறல் முறைப்பாடொன்றை நேரடியாக சட்ட உதவி ஆணைக்--குழுவுக்கு ஆற்றுப்படுத்தும் வேளை.

பொருளாதார ரீதியில் பாதிப்புறும் ஏதநிலை கொண்ட நபரொருவர் பாதிப்படைந்து ஒரு மாதத்துக்குள் அதற்கான நிவாரணத்தைக் கோரி அடிப்படை உரிமைகள் வழக்கு செயற்பாடு ஒன்றை மேற்கொள்ளும் நிலையில் அவரின் சார்பாக அவ்வழக்குச் செயற்பாடுகளை நடத்துதல்.

## பிணை விண்ணப்பங்கள்

ஒரு வருடத்துக்கும் மேலாக சிறையிலடைக்கப்பட்டுள்ள நபர்கள் (பாலியல் வன்புணர்வு மற்றும் சிறுவர் துஷ்பிரயோகக் குற்றங்கள் தவிர்ந்த) தமது பிணை விண்ணப்பங்களை மேற்கொள்ள பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாக சட்டத்தரணி ஒருவரின் உதவியைப் பெற முடியாத நிலையில் காணப்படின் இலவச சட்டப் பிரதிநிதித்துவம் வழங்கப்படும்.

## மேன்முறையீட்டு வழக்குகள்

பொருளாதார ரீதியில் பாதிப்புறும் ஏதுநிலை கொண்ட மக்கள் மேற்கொள்ளும் குற்றவியல் வழக்கு மேன்முறையீடுகள் தவிர்ந்த அனைத்து மேன்முறையீடுகள், உயர் நீதிமன்ற மேன்முறையீடுகள், எழுத்தாணை மனுக்கள், காதி நீதிமன்றங்களில் மேற்கொள்ளப்படும் மீளாய்வு மற்றும் மேன்முறையீடுகளுக்கு இலவச சட்ட உதவிகள் வழங்கப்படும்.

## ஏனைய நியாயாதிக்க சபைகளில் தோன்றுதல்

### தொழில் நியாய சபை

நியாயமற்ற பணி நீக்கத்தின் பொழுது பணியில் மீள இணைத்துக்கொள்ளக் கோரி அல்லது நட்டஈடு வழங்குமாறு கோரி தொழிலாளர் ஒருவர் தொழில் நியாய சபையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வேளை அவ்வாறான தொழிலாளர்களுக்கு இலவச சட்டப் பிரதிநிதித்துவம் வழங்கப்படும். இந்த இலவச சட்ட உதவியைப் பெறுவதற்கு தொழிலாளர் அவ்வாறான நடவடிக்கைகளை பணிநீக்கம் செய்யப்பட்டு ஆறு மாத காலத்துக்குள் மேற்கொள்ள வேண்டும்.

### கடன் இணக்க சபை

பொருளாதார ரீதியில் பாதிப்புறும் ஏதுநிலை கொண்ட மக்கள் துர்திஷ்டவசமான சூழ்நிலைகளில் தமது அசையாச் சொத்துக்களை அடகு அல்லது உரிமை மாற்றி அவசர தேவைகளுக்காக கடன் பெற்று அவ்வாறான கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் அவ்வாறான சொத்துக்கள் பிணையாக வழங்கப்பட்டவருக்கு அல்லது உரிமை மாற்றம் செய்யப்பட்டவருக்கு சொந்தமாவதைத் தடுக்கும் நோக்கில் அத்தகைய நபர்களுக்கு இலவச சட்ட உதவி வழங்கப்படும்.

## பின்வரும் அமைப்புகள் தொடர்புடைய விவகாரங்களுக்கும் மேலதிக சட்ட உதவிகள் வழங்கப்படும்

- வாடகை மீளாய்வுச் சபை
- காணி பிணக்குத் தீர்க்கும் சபை
- நட்டஈட்டு நியாய சபை
- நிருவாக மேன்முறையீட்டு நியாய சபை

## சபை வழக்குகளில் தோன்றும் சட்டத்தரணிகளுக்கு பணம் வழங்க வேண்டுமா?

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக தெரிபடும் சட்டத்தரணி ஒருவருக்கு எந்த விதக் கொடுப்பனவுகளும் மேற்கொள்ளத் தேவை இல்லை. சட்ட உதவி ஆணைக்குழுவுக்கு நிலையான பதிவுக்கட்டணமாக ரூபாய் 200/= மாத்திரமே செலுத்த வேண்டும். தாபரிப்பு வழக்குகளில் இந்த 200/=ரூபாய் பதிவுக் கட்டணமும் அறவிடப்படுவதில்லை.

> “விதிவிலக்கான சூழ்நிலைகளைத் தவிர்த்து அசையாச் சொத்துக்களின் பிரிவிடல் மற்றும் அவற்றின் முறையான பிரதிநிதிகள் சம்பந்தமான வழக்குகளுக்கான சட்ட உதவி வழங்கலை சட்ட உதவி ஆணைக்குழு நிராகரிக்கலாம்”

## சட்ட உதவி ஆணைக்குழுவின் ஏனைய சேவைகள்

### விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்

நீதிமன்றங்களில் பிரதிநிதித்துவம் வழங்குதலுக்கு மேலதிகமாக பொதுமக்கள், பொலிஸ் அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள், முதியோர் சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அரச அதிகாரிகளுக்கு கல்வி வழங்கும் நோக்கில் சட்ட உதவி ஆணைக்குழு நாடளாவிய ரீதியில் விழிப்புணர்வு வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வழங்கி வருகின்றது.

### செயற்பாடுகள்

சட்ட உதவி ஆணைக்குழு அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் ஊடாக மக்களுக்கு அறிவூட்டுகின்றது.

“நீதிய சரண” வாராந்தம் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் லங்காதீப பத்திரிகையில் வெளியிடப்படுகின்றது.




டெய்லி நியூஸ் ஆங்கிலப் பத்திரிகையில் ஒவ்வொரு வெள்ளி மற்றும் சனி ஆகிய தினங்களில் “சட்ட உதவிப் பக்கம்” என்ற மக்களுக்கு சட்ட அறிவுரை வழங்கும் வெளியீடு மேற்கொள்ளப்படுகின்றது.

பொதுமக்களின் சட்ட அறிவை உயர்த்தும் நோக்கில் சட்ட உதவி ஆணைக்குழு வானொலி மற்றும் தொலைக்காட்சி அலை வரிசைகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துகின்றது.

## சட்ட உதவி அபிவருத்தி அலகுகளின் ஊடாக வழங்கப்படும் சேவைகள்

**பணிபயிலுனர் மாணவர் பயிற்சி அலகு**

சட்டத் தொழிலை மேற்கொள்ளத் தயாராகும் சட்டக் கல்லூரியில் இருந்து வெளியேறும் மானவர்கள் இங்கு சட்ட உதவி நடவடிக்கைகள் மற்றும் தொடர்புடைய விடயங்களில் இங்கு பயிற்சி பெறுகின்றனர்.

**முதியோர் உரிமைகள் அலகு**

சொத்துக்களின் உரிமை மாற்றம், ஓய்வூதியம் தொடர்பான விடயங்கள், பிள்ளைகளால் கைவிடப்படல் போன்ற விடயங்களில் இலங்கையில் வசிக்கும் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான முதியோர்களுக்கு இவ்வலகின் ஊடாக அறிவுரை வழங்கப்படுகின்றது.

**வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களுக்கான சட்ட உதவி வழங்கல்**

தொழிலுக்காக வெளிநாடு செல்லும் நபர்களுக்கு சட்டம் பற்றிய அறிவு வழங்கப்படுவதுடன் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு சட்ட உளவள ஆலோசனையும் வழங்கப்படுகின்றது.

**சிறைக் கைதிகளுக்கு சட்ட உதவி வழங்கும் அலகு**

சிறைக் கைதிகள் சார்பில் பிணை விண்ணப்பம் மேற்கொள்வதற்கான தகவல்கள் திரட்டப்படுகின்றன. சிறைக் கைதிகளின் குடும்ப உறுப்பினர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்படுவதுடன் அதிகாரிகளுக்கு அறிவூட்டல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

**பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அலகு**

பல்வேறுபட்ட வேலைகளில் ஈடுபடும் பெண்கள் மற்றும் மாணவர்களுக்கு அவர்களின் பாதுகாப்பு மற்றும் எதிர்கால நலன்கள் தொடர்பான சட்ட விடயங்கள் தொடர்பான அறிவூட்டல் வழங்கப்படுகின்றது.

**மாற்றுத்திறன் கொண்ட நபர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அலகு**

மாற்றுத்திறன் கொண்ட நபர்களுக்கு உரித்துடையதான விசேட உரிமைகள் தொடர்பான ஆலோசனை மற்றும் சட்ட உதவி என்பன தேவையான இடங்களில் வழங்கப்படுகின்றது.

**சட்ட ஆவணங்களின் உருவாக்கம்**

நாளாந்த வாழ்வின் பாவனைக்கு அவசியமான பிறப்பு, இறப்பு மற்றும் திருமணப் பதிவுச் சான்றிதழ்கள் அத்துடன் தேசிய அடையாள அட்டை போன்ற சட்ட ஆவணங்களின் உருவாக்கம் பற்றிய அறிவுரைகள், மேலதிகமாக தேவையாயின் அவற்றைப் பெறுவதற்கான உதவிகள் என்பனவும் வழங்கப்படுகின்றன.

**நுகர்வோர் உரிமைப் பாதுகாப்பு அலகு**

நுகர்வோர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு அத்துடன் அவ்வுரிமைகள் மீறப்படும் நிலையில் எவ்வாறு முறைப்பாடுகளை மேற்கொள்வது போன்ற அறிவுரைகளும் இவ்வலகினால் வழங்கப்படுகின்றன.

மேற்குறிப்பிடப்பட்ட சேவைகள் அனைத்தும் நாடாளாவிய ரீதியில் அமைந்துள்ள 84 சட்ட உதவி நிலையங்கள் எவற்றினூடாகவும் பெறப்படலாம்.

## LAC நிலையங்களின் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| தலைமை அலுவலகம் | 011-2433618 | மன்னார் | 023-2222045 |
| அக்கரைப்பற்று | 067-2279462 | மாரவில | 032-2254443 |
| அம்பாறை | 063-2223495 | மாத்தளை | 066-2224828 |
| அநுராதபுரம் | 025-2224465 | மாத்தறை | 041-2233815 |
| அத்தனகல | 033-2297020 | மத்துகம | 034-2249262 |
| அவிசாவளை | 036-2233857 | மாவனெல்ல | 035-2247272 |
| பத்தேகம | 091-2292051 | மினுவாங்கொடை | 011-2297790 |
| பதுளை | 055-2225759 | மொணறாகலை | 055-2276891 |
| பலாங்கொடை | 045-2289099 | கல்கிஸ்ஸை | 011-2718708 |
| பலப்பிட்டிய | 091-2255753 | முல்லைத்தீவு | 021-2290077 |
| பண்டாரவளை | 057-2224733 | மூதூர் | 026-2238777 |
| பத்தரமுல்லை | 011-2877687 | நாவலப்பிட்டி | 054-2224227 |
| மட்டக்களப்பு | 065-2225399 | நீர்கொழும்பு | 031-2281080 |
| சாவகச்சேரி | 021-2270882 | நிக்கவெரட்டிய | 037-2260203 |
| சிலாபம் | 032-2222175 | நுகேகொடை | 011-2809068 |
| தம்புள்ளை | 066-2284551 | நுவரெலியா | 052-2235260 |
| தேயந்தர | 041-2268077 | பாணந்துறை | 038-2244822 |
| தெனியாய | 041-2271128 | பருத்தித் துறை | 021-2260212 |
| எம்பிலிப்பிட்டிய | 047-2230299 | பொல்கஹவெல | 037-2243039 |
| கல்கமுவை | 037-2253290 | பொலன்னறுவை | 027-2226572 |
| காலி | 091-2226124 | பொத்துவில் | 063-2248485 |
| கம்பஹா | 033-2248804 | பூகொடை | 011-2405333 |
| ஹம்பாந்தோட்டை | 047-2221092 | இரத்தினபுரி | 045-2226899 |
| ஹட்டன் | 051-2222390 | தங்காலை | 047-2240122 |
| ஹிங்குராகொடை | 027-2245521 | தம்புத்தேகம | 025-2276259 |
| ஹோமாகம | 011-2748813 | திஸ்ஸமஹாராமை | 047-2239611 |
| ஹொரணை | 034-2265244 | திருகோணமலை | 026-2226328 |
| யாழ்ப்பாணம் | 021-2224545 | வாழைச்சேனை | 065-2258349 |
| கடவத்தை | 011-2922440 | வவுனியா | 024-2221863 |
| கடுவெல | 011-2548150 | வலஸ்முல்ல | 047-2245566 |
| கெக்கிராவை | 025-2263536 | வெல்லவாய | 055-2274466 |
| கல்முனை | 067-2223710 | வறக்காப்பொலை | 037-2277075 |
| களுத்துறை | 034-2222017 | வாரியப்பொல | 037-2268199 |
| கண்டி | 081-2388978 | வெலிமடை | 057-2244860 |
| கந்தளாய் | 026-2234521 | மல்லாகம் | 021-2059170 |
| கெபதிகொல்லாவை | 025-2298101 | புத்தளம் | 032-2266636 |
| கேகாலை | 035-2231790 | சியம்பலாண்டுவை | 055-2279250 |
| கிளிநொச்சி | 021-2285618 | தெஹியத்தகண்டி | 027-2250700 |
| குளியாப்பிட்டி | 037-2284611 | LT-பொரளை | 011-2698003 |
| குருநாகல் | 037-2229641 | கலகெதர | 081-2061025 |
| மஹியங்கனை | 055-2258332 | வத்தளை | 011-2935907 |
| மாஹோ | 037-2275075 | ஹெட்டிபொள | 037-2291915 |

0719993618 | 0719994618